பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 30 திங்கட்கிழமை 14.07.2025 | அதிர்வு 344

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்களுக்கு ஜூலை 25 வரை மறியல்

இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை 02





# பளையில் குடும்பஸ்தர் மீது புலனாய்வாளர்கள் தாக்குதல்

### படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி

பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகம் செய்ததுடன், பொலிஸ் என்று எழுதப்பட்ட மேலங்கியும் அணிந்திருந்த நால்வரால் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் படுகாயங்களுடன் பளை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். 02

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் வாய்திறக்கவே இல்லை!

## அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிடுவது முற்றிலும் பொய் என்கின்றார் கம்மன்பில



"இராணுவத்தினரே உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்று பிள்ளையான் ஊடாக வாய்மூல சாட்சியத்தைப் பெறவே இந்த அரசு முயற்சிக்கின்றது. அஸாத் மௌலானாவை அரச தரப்பு சாட்சியமாக மாற்றிக் கொண்டு உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலை இராணுவத்தின் மீது சுமத்தவே அரச தரப்பு எதிர்பார்க்கின்றது. இந்தக் குண்டுத் தாக்குதல் பற்றி பிள்ளையான் ஏதும் குறிப்பிடவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது." 03






கடலில் இறங்கிக் குளிப்பதற்கு பயந்தவன், அலை ஓய்ந்த பின்னர் கடலில் குளிக்கலாம் என்று கரையில் காத்திருந்தானாம்.

அந்த மாதிரி இருக்கின்றது இப்போது மாகாண சபை தேர்தல் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி கூறுகின்ற விளக்கம்.

"மாகாண சபைத் தேர்தல்களின் எல்லை நிர்ணயம் குறித்து அமைச்சுக்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் விரைவாகக் கலந்துரையாடப்படும். எல்லை நிர்ணயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம்" – என மாகாண சபைகள் மற்றும் 03

## ஐ.நா. ஆணையாளருக்கான கடிதம்:

# சகல தரப்பினருடனும் வார இறுதியில் பேச்சு

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி எழுதிய கடிதத்தை எந்தவிதமான பின்வாங்கலும் இல்லாமல் மிக இறுக்கமாக அனைவராலும் கடைப்பிடிப்பதற்குரிய அணுகுமுறையை உறுதிப்படுத்துவதற்கு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் அமைப்புகளை ஓரிடத்தில் சந்தித்துப் பேசவுள்ளோம் என்று தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவரின் கட்சியின் தலைமைப் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2021 ஜனவரி மாதம் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் கையொப்பமிட்டு ஐ.நா. மட்டத்தில் தமிழ் மக்கள் மற்றும் தமிழ்த் தேசத்துக்கு நடைபெற்ற இனப்படுகொலைக்கான குற்றங்கள், போர்க் குற்றங்கள் என்பன எவ்வாறு கையாளப்பட வேண்டும் அதாவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கையின் சம்மதம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்றும், ஆகவே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது இலங்கை தொடர்பில் குற்றவியல் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டு பாரப்படுத்தப்பட்டு முழுமையான சர்வதேச விசாரணை நடைபெறும் என்று வலியுறுத்திக் கடிதம் ஒன்றை எழுதினோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்த போது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள், செயற்பாட்டாளர்களின் ஒப்புதலோடு ஒரு கடிதத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் வழங்கினோம். அந்தக் கடிதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கையொப்பமிட்டனர்.

அந்தக் கடிதம் வழங்கி அடுத்த வாரமே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், பொதுச்செயலாளரும் செம்மணி விவகாரத்தில் இலங்கை அரசிடம் அந்த விசாரணை நடத்துவதற்குரிய அங்கீகாரத்தைக் கூறி அதற்கு மேலதிகமாக ஒரு சில சர்வதேச தரப்புகளின் கண்காணிப்போடு செய்வதற்குரிய ஆலோசனைகளையும் வழங்கி இருக்கின்றார்கள். இது நேருக்கு நேர் முரண்பட்ட நிலைப்பாடு. செம்மணியில் நடந்தது அநியாயம். இலங்கை அரசு இதனை மூடி மறைக்க முயற்சித்த நிலையில் எதேர்ச்சியாக தற்போது வெளிவந்திருக்கின்ற ஆதாரங்களை மூடி மறைக்கின்ற சந்தர்ப்பங்களை நீங்கள் வழங்குகிறீர்கள் என்பதாகவே இந்தக் கடிதத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காக எதிர்வரும் வாரத்தின் இறுதியில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் அனைவரையும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களையும் மனித உரிமை அமைப்புகளையும் ஓரிடத்தில் சந்தித்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி எழுதிய கடிதத்தை எந்தவிதமான பின்வாங்கலும் இல்லாமல் மிக இறுக்கமாக அனைவராலும் கடைப்பிடிப்பதற்குரிய அணுகுமுறையை உறுதிப்படுத்துவதற்கு கூட்டம் ஒன்றை நடத்த நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இந்திய மீனவர்களுக்கு...

விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது

நேற்று அதிகாலை யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் எழுவரும் ஊர்காவற்றுறை நீதிவான் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதிவான் நளினி சுபாஸ்கரன் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்

இதேவேளை, இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் 24 படகுகளுடன் 181 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### பளையில் குடும்பஸ்தர்...

பலாத்காரமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற அவர்கள் தம் மீது தாக்குதல் நடத்திவிட்டு இடையில் இறக்கி விட்டுச் சென்றனர் என்று பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பளை – வண்ணான் கேணியைச் சேர்ந்த சிறீதரன் காந்தன் என்ற குடும்பஸ்தரே

புலனாய்வாளர்கள் என்று கூறப்படுவோரால் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

பாதிக்கப்பட்ட நபரின் நண்பர் ஒருவர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார். அவர் பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். ஆனால், அவர் விசாரணைக்குச் செல்லாமல் தலைமறைவாகிவிட்டார் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், தலைமறைவானவர் தொடர்பில் தகவல் அளிக்க வருமாறு பாதிக்கப்பட்டவரிடம் தம்மைப் புலனாய்வாளர்கள் என்று அறிமுகம் செய்த – பொலிஸ் என்று அடையாளமிடப்பட்ட மேலங்கி அணிந்த நால்வர் அழைத்துள்ளனர். இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில ஏற்றிச் சென்ற நால்வரும் அவரைத் தாக்கி விட்டு இடையில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார்.

பளை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நபரிடம் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

உள்ளூராட்சிமன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார் என இப்போது செய்தி வெளியாகியிருக்கின்றது.

மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக, மாகாண சபை தேர்தல்களின் எல்லை நிர்ணயம் குறித்து பேசி முடிப்பது என்றால் அது கடலில் அலை ஓய்வதற்கு காத்திருக்கும் நிலைமை போன்றதுதான்.

புதிதாக மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தை மறுசீரமைத்து, அதன் அடிப்படையில் அதை நிறைவேற்றி, அதற்குப் பின்னர் அந்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபை தேர்தலை நடத்துவது என்று காத்திருந்தால் அதற்குள் இந்த அரசின் முழு ஆட்சிக் காலமும் முடிந்து விடும் என்பது தான் அர்த்தம்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான சட்டத்தை புதிதாக மறுசீரமைப்பதில் கட்சிகளிடையே இணக்கப்பாடு வருவதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தினால்தான், அந்தச் சட்டமே நடைமுறைக்கு வராமல் அது தொடர்ந்து இழுபடுகின்றது. ஆகவே, மாகாண சபைகள் தொடர்பில் பழைய மழைய மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை உடனடியாக மீள நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் கீழ் விரைந்து தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் எல்லாத் தரப்புகளும் வலியுறுத்துகின்றன.

தேசிய மக்கள் சக்தியும் எதிரணியில் இருந்த போது அதனைத்தான் சொல்லியது.

இப்போது மாகாண சபை தேர்தலை, பழைய தேர்தல் சட்டத்தின் படி நடத்துவதற்கு நீண்ட காலம் செல்லாது. அது தொடர்பில், தற்சமயம் சாணக்கியன் எம். பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள தனிநபர் பிரேரணையை அடுத்த இரண்டு வாரத்துக்குள் நிறைவேற்றி, தொடர்ந்து தேர்தல் நடவடிக்கைகளில் இறங்க முடியும்.

புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் வரையில் மாகாண சபை முறைமை 13 ஆவது திருத்தத்தின் கீழ் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உறுதி அளித்தவர் அநுரகுமார திஸநாயக்க. அந்த உறுதிமொழியின் மேல்தான் அவர் தேர்தலில் வென்றார். ஜனாதிபதியானார்.

புதிய அரசமைப்பு வருகின்ற போது அதன் கீழ் வரக்கூடிய அதிகாரப் பகிர்வு அலகுக்கு எல்லை நிர்ணயம் செய்வது பற்றி எல்லாம் ஆறுதலாகப் பேசலாம்.

அதற்கு முன்னர், இப்போது, இருக்கின்ற மாகாண சபையை, அதற்குரிய தேர்தலை நடத்தி அவற்றின் நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்க வேண்டும். அதற்கு எல்லை நிர்ணயம் என்ற பேச்சுக்கள் எல்லாம் அவசியமற்றவை.

ரத்துச் செய்யப்பட்ட மாகாண சபை தேர்தலுக்கான சட்டத்தை மீண்டும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் கீழ் தேர்தலை நடத்தி, சபைகளை இயங்க வைக்கலாம். அதற்கு எந்த நெருக்கடியும் இல்லை. எந்த இக்கட்டும் கிடையாது.

அப்படிச் செய்வதற்கு மறுத்து, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல், இழுத்தடிப்பதற்காக இப்போது, மாகாண எல்லை நிர்ணயம் என்று புதுக் கயிறு விடுகின்றது தேசிய மக்கள் சக்தி.

இதற்கு எதிராக தமிழ் தேசிய தரப்புக்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு, கடுமையாக எதிர்க்குரல் எழுப்ப வேண்டும். மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் முறியடிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிற்போக்குவாதப் போக்குடைய உண்மை முகத்தை தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் விதத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றித்துக் குரல் எழுப்ப வேண்டிய நிலைமை வந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த விடயத்திலாவது தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்கும் ஒன்றிணைந்து செயல்படுமா?

மேலும் காலத்தை இழுத்தடிக்காமல், மாகாண சபைத் தேர்தலை நடத்த வைப்பதற்கான ஒன்றித்த போராட்டத்தில் தமிழ் கட்சிகள் இறங்க வேண்டிய வேளையும் நேரமும் நெருங்கி விட்டதாக நினைக்கிறேன்.

---

## உயிர்த்த ஞாயிறு...

– இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

“தமிழ்ப் பிரிவினைவாதிகளின் நிதியை இந்த அரசு பெற்றுக்கொண்டுள்ளது. தமிழ்ப் பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்கு விடுதலைப்புலிகளில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானைப் பலிகொடுக்க இந்த அரசு முயற்சிக்கின்றது. நன்றிக்கடன் நிமித்தமே பிள்ளையானுக்காக முன்னிலையாகியுள்ளேன்.” – என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலைப் பிள்ளையான் சிறையில் இருந்தவாறே முன்கூட்டியதாகவே அறிந்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால 2025.04.10 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் ‘தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்ச்சைக்குரிய பல விடயங்களை விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளார்’ என்று தெரிவித்தார். இதனை நம்பி ஜனாதிபதியும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்துதாகக் குறிப்பிட்டார்.

பிள்ளையானை நான் சிறையில் சென்று சந்தித்தேன். குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையானிடம் விசாரணை அதிகாரிகள் ஏதும் கேட்கவும் இல்லை, அவரும் ஏதும் குறிப்பிடவும் இல்லை. ஆகவே, அமைச்சர் ஆனந்த விஜேபால பொய்யுரைத்தார் என்பதை ஊடகங்களிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்.


உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்காகப் பிள்ளையான் கைது செய்யப்பட்டார் என்று குறிப்பிடுவது பொய், அவ்வாறு குறிப்பிடுபவர்களுக்குப் பைத்தியம். கிழக்கு பல்கலைக்கழகத்தில் உபவேந்தரைக் கடத்திக் காணாமல் ஆக்கிய சம்பவத்துக்காகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிட்டிருந்தார். ஆகவே, சுனில் ஹந்துனெத்தி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கும், ஜனாதிபதிக்கும் பதிலளித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அண்மையில் நாடாளுமன்றத்தில் பிள்ளையான் பற்றி குறிப்பிட்டது முற்றிலும் பொய்யானது. பிள்ளையான் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. அத்துடன்பிள்ளையான் தமிழ் மொழியில் வழங்கிய வாக்கு மூலத்தின் பிரதியைப் பொலிஸார் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளனர்.

தமிழ் மொழி மூல வாக்குமூலம் ஆங்கில மொழிக்கு மொழிப்பெயர்க்கப்பட்டு எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த வாக்குமூலத்தில் எவ்விடத்திலும் குண்டுத் தாக்குதல் பற்றி குறிப்பிடப்படவில்லை. உபவேந்தர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் பற்றியே கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரிவினைவாதிகளின் நிதியை இந்த அரசு பெற்றுக்கொண்டுள்ளது. தமிழ்ப் பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்கு விடுதலைப்புலிகளில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானைப் பலிகொடுக்க இந்த அரசு முயற்சிக்கின்றது. நன்றிக்கடன் நிமித்தமே பிள்ளையானுக்காக முன்னிலையாகியுள்ளேன்.

இராணுவத்தினரே உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்று பிள்ளையான் ஊடாக வாய்மூல சாட்சியத்தைப் பெறவே இந்த அரசு முயற்சிக்கின்றது. அஸாத் மௌலானாவை அரச தரப்பு சாட்சியமாக மாற்றிக் கொண்டு குண்டுத் தாக்குதலை இராணுவத்தினர் மீது சுமத்தவே அரசு முயற்சிக்கின்றது. குண்டுத் தாக்குதல் பற்றி பிள்ளையான் ஏதும் குறிப்பிடவில்லை. அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது.” – என்றார்.



## வரிச்சலுகை தொடர்பில் கலந்துரையாடல்:

# இலங்கை பிரதிநிதிகள் குழு அமெரிக்கா செல்லவுள்ளது

இலங்கை மீதான அமெரிக்காவின் 30 வீத தீர்வை வரியை மேலும் குறைப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாட்டின் பிரதிநிதிகள் குழு அமெரிக்காவிற்கு செல்லவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் இவர்கள் நாட்டிலிருந்து செல்லவுள்ளனர் என ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிடமிருந்து மேலதிக வரிச்சலுகையை பெற்றுக்கொள்வதற்காக தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்படுமென ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

அமெரிக்க தீர்வை வரிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் முன்னேற்றம், தற்போதைய நிலைமை மற்றும் தீர்வை வரிக் கொள்கையால் ஏற்படக்கூடிய பொருளாதார சவால்கள் தொடர்பில் ஏற்றுமதி கைத்தொழில் தொடர்பான அனைத்து தரப்பினருடனும் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டிருந்தார்.

# வரதர் - சுரேஷ் சந்திப்பு பிரிந்தவர்கள் கூடினர்!





ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் முன்னர் ஒன்றுபட்டுச் செயற்பட்டவர்களான அக்கட்சியின் இப்போதைய தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன், இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள் ஆகியோர் காலப் போக்கில் தங்களுக்கு இடையில் பிரிந்து நின்று செயற்பட்ட பின்னணியில் நேற்று மாலை மீண்டும் ஒன்று கூடி, கலந்துரையாடினர்.

இப்போது "சமூக ஜனநாயகக கட்சி" என்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியில் செயற்படும் வரதராஜப்பெருமாள், அக்கட்சியின் செயலாளர் கிருபாவுடனும் மற்றும் இரு உறுப்பினர்களுடனும் நேற்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்துக்குச் சென்று அவருடன் சந்திப்பில் ஈடுபட்டார். சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரர் சர்வேஸ்வரன் மற்றும் அக்கட்சியின் இரு உறுப்பினர்களும் அதில் கலந்து கொண்டனர்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த வலியுறுத்தியும், பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரியும் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் அதற்கு ஆதரவான சக்திகள் ஒன்றிணைந்து ஒரு பிரச்சார இயக்கத்தை உருவாக்குவது தொடர்பான ஆரம்ப உரையாடலாக இது அமைந்தது.

ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வேலைத்திட்டத்திற்குள் இந்த விடயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருப்பதை சுரேஷ் பிரேமச்சந்திரனின் குறிப்பிட்டு இணைந்து செயல்படலாம் என்றார் என அறிய வந்தது.




# டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவது முறையற்றது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

ஆட்பதிவுத் திணைக்களம் 5 பில்லியன் ரூபாய் வரையில் செலவு செய்து டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அந்த முறைமையை புறக்கணித்து விட்டு முழு திட்டத்தையும் இந்தியாவுக்கு வழங்குவது முற்றிலும் முறையற்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் தேசிய அடையாள அட்டையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.இருப்பினும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடங்கள் செயற்படுத்தப்படவில்லை.

இதன்பின்னர் 2023 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையை உருவாக்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் தேசிய ஆட்பதிவு திணைக்களத்துக்கு 3 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் பிரிவுகளின் நிர்வாக கட்டமைப்பு முறைமையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசிய அடையாள அட்டையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்குரிய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஆட்பதிவு திணைக்களம் டிஜிட்டல் ஆளடையாள அட்டைக்கான ஆரம்பக் கட்ட பணிகளை மேற்கொண்டு, அப்பணிகள் 99 சதவீதமளவில் நிறைவு செய்துள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் டிஜிட்டல் ஆளடையாள அட்டையை செயற்பாட்டு ரீதியில் செயற்படுத்த ஆட்பதிவு திணைக்களம் தீர்மானித்திருந்தது.

இந்திய கொள்கையுடன் செயற்பட்ட இந்த அரசாங்கம் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்க வேண்டும்,இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேசிய ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு கடும் அழுத்தம் பிரயோகித்துள்ளது.

டிஜிட்டல் முறைமையிலான தேசிய அடையாள அட்டை விநியோகத்துக்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் மாதம் பிரசுரிக்கவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ள நிலையில் தான் இந்த திட்டத்தை இந்தியாவுக்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இலங்கையில் தனிப்பட்ட தரவு சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்துக்கான விலைமனுகோரல் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.இந்த விலைமனுகோரல் இலங்கையில் பிரசுரிக்கப்படவில்லை.

இந்தியாவில் தான் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த விலைமனுகோரல் பத்திரத்தில் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறித்த தனிப்பட்ட தரவுகள் மூன்றாம் தரப்புக்கு கசிந்தால் இந்திய நிறுவனம் 10 சதவீதமளவில் தான் பொறுப்புக்கூறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் தற்போது தரவு திருட்டு பிரதான மோசடியாக காணப்படுகிறது. ஆட்பதிவுத் திணைக்களம் சுமார் 5 பில்லியன் ரூபாய் வரையில் செலவு செய்து டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அந்த முறைமையை புறக்கணித்து விட்டு முழு திட்டத்தையும் இந்தியாவுக்கு வழங்குவது முற்றிலும் முறையற்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் இந்த ஜனாதிபதி இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளது. இலங்கை மக்களின் தனிப்பட்ட தரவு கட்டமைப்பை இந்தியாவுக்கு தாரைவார்க்கும் அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாட்டை நாட்டு மக்கள் அனைவரும் கடுமையாக எதிர்க்க வேண்டும்.”- என்றார்.

# இலங்கை வந்தார் சன்னி லியோன்

நடிகை சன்னி லியோன் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்வதற்காக அவர் இலங்கை வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சன்னி லியோனை தவிர பொலிவுட் திரையுலகில் வலம் வரும் ஏனைய சில நடிகர்களும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.



# இலங்கை - சீனா இடையே நீடித்த நட்பு, பரஸ்பர உதவி

## சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அறிவிப்பு

இலங்கையுடன், நீடித்த நட்பு மற்றும் நேர்மையான பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்ட, கூட்டுறவைக் கட்டியெழுப்புவதற்குத் தயாராக உள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் துடனான சந்திப்பின்போது சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில், இரு தரப்பினரும் சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் இணைந்து செயல்படுவதற்கு இணக்கம் வெளியிட்டனர்.

அத்துடன், முக்கியமான கட்டுமான திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கும், சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கும், அவர்கள் ஒப்புக் கொண்டனர்.



இதன்போது, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற பாரிய திட்டங்கள் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் என இதன்போது வாங் யி தெரிவித்துள்ளார்.

அத்துடன், பசுமை வலுசக்தி, டிஜிட்டல் பொருளாதாரம், நவீன விவசாயம் மற்றும் கடல்சார் பொருளாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன – இலங்கை கடல்சார் ஒத்துழைப்பானது, பரஸ்பர நன்மை பயக்கும் எனக் குறிப்பிட்ட அவர், அது மூன்றாம் தரப்பினரை இலக்காகக் கொண்டதல்ல எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், மூன்றாம் தரப்பு அதில் தலையிடக் கூடாது என்றும் சீன அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சந்திப்பில் கருத்துரைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், சீனாவுடன் உள்ள உறவுக்கு, இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும், "ஒரே சீனா" கொள்கையை, இலங்கை உறுதியாகக் கடைப்பிடிக்கிறது என்றும் கூறியுள்ளார்.



# தண்ணீரை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரிக்கை

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலையைத் தொடர்ந்து, வறட்சிக்குள்ளான சில பகுதிகளுக்கு எதிர்வரும் காலங்களில் கொள்கலன் தாங்கி ஊர்தி மூலம் தண்ணீரை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இருப்பினும், தற்போது அவ்வாறான சூழ்நிலை ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சியான வானிலை காரணமாக நீர் நிலைகளில் நீர் மட்டம் குறைந்து வருவதால், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நுகர்வோருக்கு அறிவித்துள்ளது.

# வெற்றிடமாகவுள்ள பிரதம நீதியரசர் பதவி




பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ இந்த மாத இறுதியில் ஓய்வு பெறவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அவர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய முர்து பெர்னாண்டோ, கடந்த 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையின் 48 ஆவது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில், அவரது ஓய்வை அடுத்து, இலங்கை அரசமைப்பு சபையின் அனுமதியுடன், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி பிரதம நீதியரசருக்கான பரிந்துரையை முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.




# பரீட்சை பெறுபேற்றை மாத்திரம் வைத்து கல்வியை அளவிடும் முறைமை தவறு

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

பரீட்சை பெறுபேறுகளை மாத்திரம் வைத்து கல்வியை அளவிடும் முறைமை மிகவும் தவறானது எனவும், அந்த முறைமை மாற்றப்பட வேண்டுமெனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை ரோயல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போது, அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து தரப்பினரும் கல்வி குறித்து குறுகிய பார்வையைக் கொண்டிருக்கின்றனர் எனவும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைமையினை மாற்றுவதன் மூலம், மாணவர்கள் தங்களது திறமைகளுடன் முன்னேறுவதற்கு உதவும் கல்வி முறைமையினை உருவாக்குவதற்கு உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், படைப்பாற்றல் மற்றும் மனிதாபிமானம் கொண்ட சிறுவர்களை வளர்ப்பதே தங்களது நோக்கமாகும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய இதன்போது தெரிவித்துள்ளார்.








# கப்பலில் அதிக சிகரெட்டுக்கள் எடுத்து வந்த வர்த்தகர் கைது!

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் நாகப்பட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு நேற்று வந்த கப்பலில் அதிக சிகரெட்டுக்கள் எடுத்து வந்த வர்த்தகர் ஒருவர் சுங்கத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறையில் வந்து இறங்கிய சமயம் பயணப் பையில் 700 சிகரெட்டுக்கள் எடுத்து வந்த இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியைச் சேர்ந்தவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நபர் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# சம்மாந்துறையில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இருவரிடம் விசாரணை முன்னெடுப்பு






(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளை சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த இரு சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லரிச்சல் 01 பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சிலர் நடமாடுகின்றனர் என நேற்று சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இரு சந்தேக நபர்கள் சோதனை செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்த கையடக்க தொலைபேசியின் உட்பகுதியில் ஐஸ் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டநிலையில் மீட்கப்பட்டது. கைதான சந்தேக நபர்கள் சம்மாந்துறை புளக் ஜே 02 பகுதியைச் சேர்ந்த 28 வயது மற்றும் கல்லரிச்சல் 03 பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர்களாவர்.

கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரிடம் 2 கிராம் 631 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கையடக்கத் தொலைபேசி, பணம் என்பன மீட்கப்பட்டன. மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 330 மில்லிகிராம் ஐஸ்போதைப் பொருள் மீட்கப்பட்டது.

# கவிஞர் சேரனின் 'உறைய மறுக்கும் காலம்' நூல் யாழ் கலைத்தூது கலையகத்தில் நாளை வெளியீடு

கவிஞர் சேரனின் எழுத்துக்கள் குறித்த , பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட 26 கட்டுரைகளின் பெருந் தொகுப்பான 'உறைய மறுக்கும் காலம்' நூலின் வெளியீடும் தமிழக இலக்கிய ஆளுமை பவா செல்லத்துரை, திரைப்பட இயக்குநர் லெனின் பாரதி ஆகியோரின் உரையும் சந்திப்பும் நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரை இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெற உள்ளது .

நூல் வெளியீட்டு நிகழ்வு மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நூல் குறித்த உரையை கவிஞர் த. அஜந்தகுமாரும், எழுத்தாளர் இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்த உள்ளனர். உரையாடல் அரங்கை லண்டன் சமூகம் இயல் பதிப்பாளர் பால சபேசன் வழிப்படுத்த உள்ளார்.

இந்த நிகழ்வில், மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரை தமிழின் முக்கிய நூல்களின் காட்சியும் விற்பனையும் கலந்துரையாடலும் இடம்பெற உள்ளன.

இந் நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.







# விமானப்படை - பொலிஸார் இணைந்து இரவில் விசேட சோதனை நடவடிக்கை

## மட்டக்களப்பு நகரத்தில் முன்னெடுப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் விமானப்படை மற்றும் பொலிஸார் இணைந்து விசேட சோதனை நடவடிக்கையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மேற்கொண்டனர்.

முக்கிய சந்திகள் மற்றும் வீதி சுற்றுவட்டப் பகுதிகளில் நின்று வீதிகளில் பிரயாணித்த மோட்டர் சைக்கிள் மற்றும் வாகனங்களை நிறுத்தி சோதனை நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் கடந்த சில காலங்களாக தொடர்ச்சியாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜூன் 30ஆம் திகதி வரையிலான 6 மாதத்தில் சுமார் 40 பேர் உயிரிழந்துள்ளனர். இதனை தடுப்பதற்கு கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் ஆலோசனைக்கமைய மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்தினவின் வழிகாட்டலில் முக்கிய சந்திகளில் வீதியால் பிரயாணிக்கும் வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில் முதற் கட்டமாக மட்டு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள நகர் பகுதிகளில் உள்ள முக்கிய சந்திகள் வீதி சுற்றுவட்டப் பகுதியில் விமானப்படை மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் இரவு 11 மணிவரையில் அந்த வீதிகளின் ஊடாக பிரயாணித்த மோட்டார் சைக்கிள் வாகனங்களை நிறுத்தி சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.




# பாலியாறு கூட்டுக் குடிதண்ணீர் திட்டம் பூர்த்தியானால் 4.15 லட்சம் மக்களுக்கு நீர் வழங்குவது சாத்தியமாகும்

## மன்னார் கலந்துரையாடலில் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாகவே பாலியாறு நீர்த்திட்டம்

திட்டமிடப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணா திலக தெரிவித்துள்ளார்.

பாலியாறு நீர்த்திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்கள் மட்டுமே குறைந்த அளவிலான நீர் வளங்களைப் பெற்றிருக்கின்றன.

அந்த வகையில் இந்தப் பாலியாறு குடிதண்ணீர்த் திட்டம் பூர்த்தியடைந்ததும், மன்னார் மாவட்டத்திற்கும் யாழ்ப்பாணத்துக்கும் குடி தண்ணீரை வழங்க முடியும்.

இந்தத் திட்டம் நிறைவேறிய பிறகு, சுமார் 4.15 இலட்சம் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவது சாத்தியமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்நீர்த்தேக்கம்சுமார்828ஹெக்ரெயர்கள் பரப்பளவில் இருக்கும்.

மேலும், இது 256 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியது. இதனால் சுற்றுச்சூழலுக்குச் சில பாதிப்புகள் ஏற்படலாம்.

ஆனாலும் அந்தத் தாக்கங்களைக் குறைக்க நாம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

இன்று வனவளத் துறையினர் மற்றும் அதிகாரிகள் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தல் தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு ஒப்புக்கொண்டமை மகிழ்ச்சியளிக்கிறது.

அந்த ஆய்வுகளின் முடிவில் சில பரிந்துரைகள் வரக்கூடும். அந்தப் பரிந்துரைகளைப் பின்பற்றி, இத்திட்டத்தை விவசாயிகளுக்கும், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுத்தவுள்ளோம். – என்றார்.

இந்தக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி, நகர்ப்புற வளர்ச்சி கட்டுமானம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் செயலாளர் எம்.எம்.நயீம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன், நீர்வளங்கள் மற்றும் வடிகால் அமைச்சின் தலைவர், மன்னார் மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பிரதிநிதிகள், மன்னார் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள். அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், மன்னார் மாவட்டத்தின் நகர சபை மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.














# சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது!

(பாறுக் ஷிஹான்)

சட்டவிரோத சிகரெட்டுக்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக சிகரெட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாக நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.எஸ்.நிசாந்த வெதகேக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 07 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான 4,601 சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதாகினர்.

இரண்டு சந்தேக நபர்களையும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சிறைகளில் நெருக்கடி!

இலங்கையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 36 சிறைச்சாலைகளில் மொத்தம் 12,000 கைதிகளுக்கு மட்டுமே இடவசதி உண்டு. ஆனால், அந்தச் சிறைகளில் தற்போது 33,000 க்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனால் சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய வீரசிங்க, ஆபத்தான அளவில் அதிகரித்துள்ள கைதிகள் எணணிக்கையை முகம் கொடுத்துச் சமாளிக்க சிறைச்சாலைகள் திணைக்களம் திணறுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதே போன்ற கருத்தை நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவும் நான்கு மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

“சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதால் பாரிய இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்திக்கும் வகையில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்” என அப்போது அவர் குறிப்பிட்டிருந்தார்.

“சிறைச்சாலைகளில் உள்ள இடவசதி எண்ணிக்கைக்கு மூன்று மடங்கில் சிறைக் கைதிகள் அங்கு உள்ளனர். சிறைச்சாலைக் கட்டமைப்புக்குள் தற்போது 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் காணப்படுகின்றனர். அவர்களின் 19,000 பேர் விளக்கமறியல் கைதிகளாக உள்ளனர். கொழும்பு, பொலனறுவை உள்ளிட்ட பல்வேறு சிறைச்சாலைகளிலும் இட நெருக்கடி காணப்படுகிறது. சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.” - என்று அவர் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக - அதற்கான முறைமை ஒன்றை தயாரிப்பதற்காக - மூன்று வாரங்களுக்கு முன்னர் குழுவொன்றைத் தாம் நியமித்துள்ளார் என அப்போது - கடந்த மார்ச்சில் - நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்திருந்தார்.

சிறைச்சாலைகளில் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட கைதிகள் பகுதியில் இட நெருக்கடி காணப்படவில்லை. விளக்கமறியல் கைதிகளின் பகுதியில்தான் நெருக்கடி உள்ளது. அதனால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி தாம் நியமித்த குழுவின் பரிந்துரைக்கமைய சிறைகளில் இட நெருக்கடியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்போது நீதியமைச்சர் கூறியிருந்தார்.

ஆனால் இந்த நான்கு மாதங்களில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக, சிறைக் கைதிகளின் எண்ணிக்கைதான் உயர்ந்துள்ளது.

சிறை என்பதே விலங்குகள் போல மனிதர்களை அடைத்து வைக்கும் ஒரு கட்டமைப்பாகவே பொதுவாக நோக்கப்படுகிறது. கைதிகளை மனிதாபிமான ரீதியில் தடுத்து வைப்பதற்கான வழிமுறைகள், ஏற்பாடுகள், முறைமைகள், நடைமுறைகள் எனப் பல ஒழுங்குகள் சிறைத்துறை விதிகள் மற்றும் சட்டங்களில் இருந்தாலும் அவை பெரும்பாலும் நடைமுறையில் கடைபிடிக்கப்படுவதில்லை. ஏற்கனவே விலங்குகள் போல சிறைக் கம்பிகளுக்கு பின்னால் தடுத்து வைக்கப்படும் கைதிகள் இந்த இட நெருக்கடி காரணமாக முழுமையான விலங்குகள் போலவே நடத்தப்படும் மோசமான நிலைமை நாட்டில் உள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு அரசு விரைந்து தீர்வு காண்பது - கைதிகள் விடயதில் மனிதாபிமான நடைமுறைகளை உறுதிப்படுத்துவது - மிக முக்கிய அவசரப் பணியாகும்.




# 2026 இல் வரும் கல்விச் சீர்திருத்தங்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் திருகோணமலையில்

(எஸ்.கீதபொன்கலன்)

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக மாகாண, பிராந்திய மற்றும் பிரதேச மட்டத்திலான கல்வி மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கிழக்கு மாகாணத்திற்கான விழிப்புணர்வு கலந்துரையாடல்நேற்றுக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களக் கேட்போர் கூடத்தில் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போதைய கல்வி முறையில் மாற்றம் தேவை எனவும், பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் பிரதமர் குறிப்பிட்டார். ஆசிரியர், அதிபர் மற்றும் கல்வி நிர்வாக வெற்றிடங்கள் தொடர்பாக அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன எனவும், அவை தீர்க்கப்பட வேண்டும் எனவும், இந்தக் கல்விச் சீர்திருத்தத்தை தனியாக பார்க்காமல் முழுமையான செயல்முறையாகப் பார்க்க வேண்டும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் புதிய சீர்திருத்தங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு ஆசிரியர்கள் மட்டுமல்ல, நிர்வாகத் துறை மற்றும் பெற்றோர்களின் ஆதரவும் அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

புதிய கல்வி சீர்திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் பாடத்திட்டத் திருத்தங்கள், மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு முறை, உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், ஆசிரியர், அதிபர் மற்றும் கல்வி நிர்வாக வெற்றிடங்களைக் குறைத்தல், மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையிலான முறையான ஒருங்கிணைப்பு, மாகாண சபை மட்டத்தில் நிலவும் பிரச்சினைகளுக்குத்தீர்வு வழங்குதல்போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.





# அறிவார்ந்த சமூகக் கட்டமைப்பு இங்கு ஆட்டம் காணுகின்றதா?



வி.எஸ்.சிவகரன்

உலகை ஆள்வது அறிவு. மூடநம்பிக்கையை அகற்றி, அறிவினால் அகிலத்துக்கு ஒளியூட்டி, ஏன், எதற்கு, எப்படி என்கின்ற கேள்விகளை எழுப்பி, பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்தி, மானுடமெங்கும் மகத்துவ வாழ்வுக்கு கேள்வி கேள் என்னும் அறிவு நிலையே சமூகத்தின் இருப்பை தெளிதிறன் நோக்கில் தக்க வைக்க முடியும். இந்த அறிவியல் கோட்பாட்டை மனிதனின் ஆராய்ச்சியும் முயற்சியும் விண்ணில் கோலோச்சும் திறனும் மதி நுட்பமும் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் உலகத்தின் மாறுதல்களும் ஏறுதல்களும் புதிய வரவுகளும் என விஞ்ஞானம் மிக வேகமாக அசுர வளர்ச்சி பெற்று வரும் சூழலில், வறுமையைப் போக்கி, வாழ்க்கையை மாற்றி, தீண்டாமையை அழித்து, சனாதனத்தை எதிர்த்து, தன் நிலையை உயர்த்தி, இந்நிலையிலும் வீழாத உச்சத்தில் நின்று அச்சமற்ற வாழ்க்கையை வாழக்கூடியதற்கு அறிவு ஒன்றே இலக்கணமாகும்.

படிப்பிற்கும் அறிவுக்கும் தொடர்பு இல்லை. அறிவுக்கும் பேறுபேறிற்கும் ஆளுமைக்கும் வல்லமைக்கும் தொடர்பு இல்லை. ஆனால் “கணக்குப் பிள்ளை பேசக்கூடாது, கணக்குப் புத்தக்ச்மே பேச வேண்டும்” என்பது போல் பரீட்சை முடிவுகளே இலக்கின் இருப்பை நிர்ணயிக்கின்றன என்பதுதான் விதியாகக் காணப்படுகிறது.

இயல்பில் ஆளுமையற்றவர்கள் கூட நினைவாற்றல் கொண்டமையால் பரீட்சையிலே இலகுவாக தேறி விடுகிறார்கள். இந்த ஆபத்தும் பரீட்சையின் ஊடான வெளிப்படுத்தலுக்கு – ஆளுமைக் குறைவான நிர்வாகத்துக்கும் – காரணமாக அமைகின்றன.

உருவாக்குபவனுக்கே உலகம் சொந்தம் எனும் ஓசோவின் கோட்பாடும், அறிவுக் கடலின் ஆழத்திற்கு அழைத்துச் செல்பவனே ஆசிரியர் எனும் நிலை இன்று காணப்படுகிறதா? சேவையாக இருந்த கல்விச்சேவை எப்பொழுது வணிகமயமாதலுக்கு உட்பட்டதோ அப்போதே கல்வியின் தரமும் குன்றத் தொடங்கிவிட்டது.

அறம் இல்லாத கல்வி வாள் இல்லாத உறை போன்றது. இன்றைய கற்றல் – கற்பித்தல் மாணவர்களை பரீட்சைக்குத் தயாராகும் இயந்திரங்களாக உருவாக்குகின்றன. தனிமனித வாழ்க்கைக்குத் தேவையான வாழ்வியல் அம்சங்களோ, ஒழுக்க நெறிமுறையோ, சமூகத்தை எதிர்கொள்ளக்கூடிய தற்றுணிவோ, சமுதாயத்துக்கு தலைமை தாங்குகின்ற வல்லமையோ, ஆளுமையோ எதுவும் வெளிப்படுத்துவதில்லை.



கல்வி சேவையிலிருந்து வணிகமயமாதலுக்கு உட்படுத்தப்பட்டு, தனியார் வகுப்புக்கள் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டதோ அப்போதே கல்வியின் தரமும் கல்வியின் சுய ஒழுக்கமும் ஆசிரியத்துவத்தின் மகத்துவமும் மரணித்து விட்டன.

கல்வி வணிகம் மிக மோசமாக இந்த சமூகத்தை சிதைக்கின்றது.

அந்தக் காலத்து குலக்கல்வி திட்டம் போல் இந்த காலத்தில் வசதி படைத்தவர்கள் மட்டுமே கல்வியைப் பிரபல ஆசிரியர்களிடம் கற்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலை நிலவுகின்றது.

பாடசாலையிலே முப்பது மாணவர்களைக் கவனிப்பது கடினமாக இருக்கும். ஆசிரியர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளிலே 500க்கு மேற்பட்டவர்களுக்கு எப்படிக் கற்பிக்க முடியும்? சில ஆசிரியர்கள் மாதத்தில் 20 தொடக்கம் 30 இலட்சம் வரை பிரத்தியேக வகுப்புக்களால் வருமானம் அடைகிறார்கள்.

சுய ஒழுக்கம் இல்லாத கல்வி பிணத்துக்கு சமனானது. இன்று ஆசிரியர்களிடமே சுய ஒழுக்கம் குறைவாகவே காணப்படுகிறது. ஆசிரியரும் மாணவனும் சேர்ந்து மது அருந்துகிறார்கள்.

ஆசிரியம் எனும் உயரிய சொல்லுக்கு இன்று எத்தனை பேர் நிகரானவர்கள்? அர்ப்பணிப்பு, தியாகம், எதிர்கால சமூகத்தின் மீதான தீர்க்கமான கரிசனை – இவையெல்லாம் இன்றைய ஆசிரியர்களிடம் வெகுவாக குறைந்துவிட்டன.

மாணவர்களை ஒழுங்குபடுத்த முடியாத வகையில் இரு சாராரின் ஒழுக்கமும் விழுப்பம் இல்லாமல் பிறழ்கிறது.

இதற்கு இலவச கல்வியும் ஒரு காரணம்.

யுத்த காலத்தை விட தற்போதைய நிலையில் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு பல்வேறு விதமான வசதிகளும் வாய்ப்புகளும் தொடர்பாடல் சாதனங்களும் கிடைத்தாலும், கற்பதற்குரிய மனோநிலையிலும் விருப்பிலும் மாணவர்கள் இருப்பது மிகவும் குறைவு. சிந்தனையை நோக்கு நிலையில் ஒருமுகப்படுத்தி, இலக்கு நோக்கி அடைய முடியாத கவனச் சிதறல்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் தொலை பேசிப் பாவனையும், சமூக ஊடகங்களின் ஆக்கிரமிப்பும், தாராள போதை பொருள் புழக்க

தொடர்ச்சி▼



# அறிவார்ந்த சமூகக் கட்டமைப்பு இங்கு ஆட்டம் காணுகின்றதா?

தொடர்ச்சி▲

மும், மதுப்பாவனையும் ஆளுமையான ஒரு மாணவனை உருவாக்குவதிலே சவாலாகக் காணப்படுகின்றன.

இவை மட்டுமா? தனியார் கல்வி நிறுவனங்களின் ஆக்கிரமிப்பும் அதில் பணத்தின் மூலம் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் எனும் "கோப்றேற்" கல்வி வணிகமும் மாணவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை இழக்க செய்கின்றன. தேடிப் படிப்பதற்கு நேரம் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இணைய வழியிலேயே இலகுவாக தகவல்களை எடுத்து, ஆங்காங்கே உள்ளவற்றை பொருத்தி, சமர்ப்பித்து விட்டு, பட்டம் பெறுகின்ற தனியார் நிறுவனங்கள் அதிகரித்துவிட்டன. இதுவும் இல்லாமல் பணத்தைச் செலுத்தி பட்டத்தை பெறக்கூடிய நிறுவனங்களும் தோன்றி விட்டன. கல்வியின் தரம் குன்றியதோடு அதன் மகத்துவம் குறைந்துள்ளது.

கற்காமல் கற்றதாய் பெற்ற இச்சான்றிதழ்கள் எந்த வகையிலும் பயனற்று போகக் கூடிய நிலையில் தான் இன்றைய கல்வி நிறுவனங்கள் சான்றிதழ் உற்பத்தி செய்யும் பதிப்பகங்களாகவே மாறிவிட்டன என்பதே கசப்பான உண்மை.

பரீட்சை பெறுபேறுகளை பெற்றோரின் அக்கறையும் தீர்மானிக்கின்றது. இன்று புலமைப் பரிசில் பரீட்சை பெற்றோர்களுக்கானதே. ஏனைய பரீட்சைகளும் பெற்றோரின் முழு முயற்சியே காரணமாகி விட்டது.

மாணவர்கள் பாடங்களுக்கு அப்பால் எந்தவிதமான அடிப்படை அறிவும் இல்லாமல் "புரொய்லர் கோழிகளாகவே" உருவாக்கப்பட்டு "சோடா கேஸ்" ஆக வெளி வருகிறார்கள். இவர்களிடம் சமூகக் கட்டமைப்பின் தலைமை தாங்கும் ஆளுமைப் பண்பை எப்படி எதிர்பார்க்க முடியும்?

மனிதர்களின் மாற்றத்தையும் ஏற்றத்தையும் வீழ்ச்சியையும் முயற்சியையும் சூழலே தீர்மானிக்கின்றன.

அறிவில்லாத – ஆரோக்கியமற்ற – பகிர்வில்லாத – தோல்விகளை ஏற்று உணர்ந்து கொள்ளாத – அதனை மதிக்காத – சமூக கட்டமைப்பை நாம் எல்லோரும் உருவாக்கி வருகிறோம். அது எதிர்காலத்தின் இருப்பை மிக மோசமாக கேள்விக்குட்படுத்தும். ஒரு சமூகத்தை அளிக்கின்ற பொறுப்பு ஆசிரியர்களிடமே உண்டு. அவர்களின் சாபத்துக்கு உள்ளாகாதீர்கள் என பெரியவர்கள் கூறுவது உண்டு. ஆனால் இன்றைய ஆசிரியர்கள் அதற்கு பொருத்தமுடையவர்களா?

வெறுமனே, ஆசிரியர்களையும் மாணவர்களையும் குற்றம் சாட்டுவது கட்டுரையின் நோக்கம் அல்ல. வடக்கு – கிழக்கு கல்வி திணைக்களங்களில் மிக மோசமான குறைபாடுகள் உண்டு. பொருத்தம் இல்லாத இடமாற்றம், தகுதி இல்லாத நியமனம், ஆளுமை இல்லாத அதிகாரிகள், வல்லமை இல்லாத திணைக்களத் தலைவர்கள், செயல்படுத்த முடியாத கல்விக்கட்டமைப்பு, சுயநலத்திற்காகவும் சந்தர்ப்பவாதத்துக்காகவும் அரசியல் நலன்களுக்காகவும் கல்வியின் இருப்பை வேரறுக்கின்ற செயல்பாடுகள், குறிப்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களமும் தங்களை விட மேட்டிமைவாத அறிவாளிகள் இல்லை என அவ்வப்போது காட்டுகின்ற மேலிடைகளால்தான் இன்று வடக்கில் கல்வி பரிதாபமான நிலைக்குட்பட்டுள்ளது.

கல்வி அதிகாரிகளின் பழிவாங்கலும், அதனால் மனோநிலை ரீதியாக பாதிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் முழுமையாக கற்றல் – கற்பித்தல் செயல்பாட்டில் ஈடுபட முடியாமல் இருக்கின்ற நிலைப்பாடும், விருப்பத்துக்கு மாறான இடமாற்றங்களால் தனிமனித விருப்பு வெறுப்புக்கு உள்ளாகும் கல்வியாளர்கள் எனப் பிரச்சினை தொடர்கிறது.

சட்டத்தை உபயோகிக்க முனையும் கல்வித் திணைக்களம் நடைமுறை யதார்த்தத்தை பின்பற்ற தவறி விடுகின்றது. தன்னுணர்வில்லாத கற்பித்தல் ஒருபோதும் பயனைத் தரப்போவது இல்லை. கல்வி முறைமை முழுமையாக சீர்திருத்தப்பட வேண்டும் .

ஆசிரியத்துவமும் ஆசிரியர் ஒழுக்க நடைமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

விருப்பு வெறுப்பின்றி மாணவர்களின் பின்னடைவுக்கு காரணத்தை கண்டறிய வேண்டும். கல்விப் புலத்தில் உள்ள பக்கச் சார்பு , ஊழல், அரசியல் சார்பு, மதவிருப்புவெறுப்பு போன்றவற்றை முழுமையாகக் களைய வேண்டும். பாடசாலை கற்பித்தலை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும். மாலை நேரக் கற்பித்தலை ஊக்குவிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதிகாரிகள் பொறுப்புக் கூறலுக்குட்பட வேண்டும்.

ஆசிரியத்துவம் என்பது கடமை அல்ல, சேவை என்கின்ற மனோநிலை உருவாகாத வரைக்கும் கல்வியில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

பிற்போக்கு சிந்தனையுடைய சமூகமே திரட்சி அடையக்கூடிய ஆபத்தான நிலை தோன்றும். கல்விக் கட்டமைப்பு மாற்றத்தை நோக்கின் நகருமா என்பது மில்லியன் டொலர் கேள்வி.












# மன்னிப்பு வேண்டாம் எமக்கு நீதி வேண்டும்!

## த.வெ.க. போராட்டத்தில் விஜய் சீற்றம்

"தி.மு.க. ஆட்சியில் 24 பேர் பொலிஸ் காவலில் உயிரிழந்திருக்கின்றனர். அவர்கள் அனைவரின் குடும்பத்தாரிடமும் மன்னிப்பு கேளுங்கள். அவர்கள் அனைவரின் குடும்பத்துக்கும் நிதியுதவி வழங்குங்கள்."

– இவ்வாறு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பொலிஸ் நிலையத்தில் அஜித்குமார் என்ற இளைஞர் பொலிஸார் தாக்கியதால் உயிரிழந்த சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. உயிரிழந்த அஜித்குமாரின் இல்லத்துக்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நேரடியாக சென்று அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, நிதி உதவி வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தலைமையில் திருப்புவனம் பொலிஸ் நிலைய "லொக்அப்" மரணத்தை கண்டித்தும், கொலைக்கு நீதி வேண்டியும் நேற்று சென்னையில் அவர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், கடந்த 4 ஆண்டுகளில் "லொக்அப்" மரணங்களில் தங்கள் உறவுகளை இழந்தவர்களின் குடும்பத்தினரும் மேடையேற்றப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விஜய் உரையாற்றுகையில்,

"திருப்புவனம் மடப்புரம் அஜித்குமார் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்தக் குடும்பத்துக்கு நடந்த கொடுமைக்கு முதல்வர் ஸ்டாலின் "சொறி" சொன்னார். நல்ல விஷயம்தான். ஆனால், உங்களின் ஆட்சியில் 24 பேர் பொலிஸ் நிலையங்களில் இறந்திருக்கின்றனர். அவர்களிடமும் "சொறி" சொல்லுங்கள். அவர்களுக்கும் நிதியுதவி வழங்குங்கள்.

சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ் வழக்கை சி.பி.ஐக்கு மாற்றிபோது விமர்சித்தீர்களே. இது தமிழகத்துக்கு அவமானம் என்று சொன்னீர்கள். இப்போது ஏன் இந்த வழக்கை சி.பி.ஐக்கு மாற்றினீர்கள். இப்போதும் சி.பி.ஐ ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.கவின் கைப்பாவையாகத்தானே இருக்கிறது?

நாங்கள் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை கேட்டதால், பயந்து போய் சி.பி.ஐக்கு மாற்றியிருக்கிறீர்கள். ஏன் ஒன்றிய அரசின் பின்னால் ஒளிந்து கொள்கிறீர்கள்?

இன்னும் உங்கள் ஆட்சியில் எத்தனை அடாவடிகள். அண்ணா பல்கலை. மாணவி வழக்கு முதல் அஜித்குமார் வழக்கு வரை எல்லாவற்றுக்கும் நீதிமன்றம் தலையிட்டு கேள்வி கேட்கிறது. நீதிமன்றம்தான் கேள்வி கேட்க வேண்டும் என்றால், நீங்க எதுக்கு சார்? உங்க ஆட்சி எதுக்கு சார்? முதல்வர் பதவி எதுக்குங்க சார்? அதிகபட்சம் உங்ககிட்ட வர்ற பதில், "சொறி" மா, நடக்கக்கூடாதது நடந்துடுச்சு மா" என் பதுதானே. இந்த வெற்று விளம்பர மொடல் தி.மு.க. சர்க்கார், இப்போ "சொறி" மா மொடல் சர்க்காரா மாறிடுச்சு.

இந்த இன்னபிலிட்டி அரசாங்கம் ஆட்சியை விட்டு செல்வதற்கு முன்பு, நீங்க செய்த எல்லா தவறுகளுக்கும் பரிகாரமா சட்டம் – ஒழுங்கை நீங்களே சரிசெஞ்சாகணும். இல்லன்னா, மக்களோடு மக்களா நின்று உங்களை சரி செய்ய வைப்போம். த.வெ.க. சார்பில் அதற்கு உண்டான போராட்டங்கள் நடத்தப்படும்." என்றார்.







# 50 மீனவர்கள், 232 மீன்பிடி படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கையால் சிறைபிடித்து வைக்கப்பட்டுள்ள 232 தமிழக மீன்பிடி படகுகளையும், 50 மீனவர்களையும் விரைவில் விடுவிக்க அவசர மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், “இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட மற்றொரு துயர சம்பவத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 13.07.2025 அதிகாலையில், ஏழு மீனவர்கள், அவர்களின் இயந்திர மீன்பிடி படகுடன் கைது செய்யப்பட்டனர். அதே நாளில், மற்றொரு சம்பவத்தில், மற்றொரு இயந்திர படகு இலங்கை கடற்படை கப்பலால் மோதப்பட்டதாகவும், இதன் படகின் பின்புறம் குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிய வருகிறது.

மீண்டும் மீண்டும் நிகழும் இந்த சம்பவங்கள் மிகவும் கவலையளிக்கின்றன. அவை நமது மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், அவர்களின் குடும்பங்களை நீண்டகால பொருளாதார நெருக்கடி மற்றும் தொடர்ந்த துயரங்களுக்கும் உள்ளாக்குகின்றன.

இந்த விவகாரத்தை மேலும் சிக்கலாக்கும்வகையில், 2024ஆம்ஆண்டு கைது செய்யப்பட்ட மீனவர்களில் பலர் இன்னும் இலங்கை காவலில் உள்ளனர் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். தற்போது, 232 தமிழக மீன்பிடி படகுகளும் 50 மீனவர்களும் இன்னும் இலங்கை அதிகாரிகளால் சிறைபிடித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தொடர்ச்சியான அச்சங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, கிடைக்கக்கூடிய அனைத்து தூதரக வழிகளையும் மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன். கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க அவசர மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ட்ரம்பின் வரியை 20 சதவீதமாக குறைக்கும் முயற்சியில் இந்தியா



அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரியை 20 சதவீதம் வரை குறைப்பது தொடர்பிலான ஒப்பந்தம் குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன என நம்பதகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால ஒப்பந்தமானது தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு வழி வகுக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்காக வெள்ளை மாளிகையை அணுகிய முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக இந்தியக் குழு ஒன்று விரைவில் வொஷிங்டனுக்கு பயணிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இஸ்ரேலின் தாக்குதலில் ஈரான் ஜனாதிபதி காயம்

கடந்த மாதம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெஜஸ்கியான் காயம் அடைந்தார் என தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

இஸ்ரேலைத் தளமாக கொண்டு இயங்கும் செய்தி நிறுவனமான தி டைம்ஸ் ஒப் இஸ்ரேல் இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஈரான் இது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகவும், இதனால் தங்களுக்கு ஆபத்து ஏற்படும் எனக்கூறி கடந்த மாதம் அந்நாடு மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள் என்பவற்றைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்குப் பதிலடியாக ஈரானும் தாக்குதலில் ஈடுபட்டது. இதில் பலர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் தலையீட்டால், இரு தரப்புக்கு இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஈரான் ஜனாதிபதி மசூத் பெஜஸ்கியான், ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகேர், நீதித்துறைத் தலைவர் மோசெனி எஜெய் உள்ளிட்டோர் ஈரான் தேசிய பேரவை கூட்டமொன்றில் கலந்துகொண்டனர்.



இக்கூட்டம் நடந்த கட்டடத்தைக் குறிவைத்து, ஆறு ஏவுகணைகளை இஸ்ரேல் ஏவியது.

இதில், ஜனாதிபதி மசூத் பெஜஸ்கியான் உட்பட சிலர் காயமடைந்தனர் என ஈரான் புரட்சிகரப்படையுடன் தொடர்புடைய அமைப்பு தற்போது செய்தி வெளியிட்டு உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. இஸ்ரேல் தன்னை கொலை செய்ய சதி செய்வதாக மசூத் பெஜஸ்கியான் ஏற்கனவே குற்றம்சாட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவுடன் மீண்டும் அணுசக்தி பேச்சுக்குத் தயார்

## ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

அமெரிக்காவுடன், மீண்டும் அணுசக்தி தொடர்பான பேச்சுவார்த்தைக்குத் தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

அணுசக்தி பயன்பாடு தொடர்பில், அமெரிக்காவுடன், ஈரான் மறைமுக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தது. யுரேனியம் செறிவூட்டலை 4 சதவீதத்திற்குள் குறைக்க அமெரிக்கா வலியுறுத்தியது.

காரணம், யுரேனியத்தை 90 சதவீதத்திற்கு மேல் செறிவூட்டினால், அதை அணு ஆயுதமாக்க முடியும். இதற்கிடையே, அமெரிக்காவின் திட்டத்தை ஈரான் நிராகரித்தது.

அதைத் தொடர்ந்தே, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதலை ஈரான் எதிர்கொண்டது.

இந்நிலையில், "எங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என உறுதியளித்தால், அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சு நடத்தத் தயார்" என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -14.07.2025




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்படச் செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பொறுப்புகள் காணப்படும். இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும். இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்று சாதகமான நாள். உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும். இந்தச் சவால்களைத் திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.




இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -14.07.2025




முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச்சுமைகளை கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக் கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று அறிவுப்பூர்வமான அணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்லபலன்கள்கிடைக்கும்.உங்கள்மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்டாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் நல்ல வருமானம் கிடைக்காது.

பல்வலி அல்லது செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். ஆரோக்கியத்தில் சிறந்த கவனம் செலுத்துங்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தனமையுடன் காணப்படும். கையில் உபரி பணம் காணப்படும். அதை ஆக்க பூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள்.

எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது.தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை



காலி முதல் மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாமென மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடற்பிராந்தியங்களில் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் காற்றின் வேகம் 50 முதல் 55 கிலோமீட்டர் வரை அதிகரித்து காணப்படுமென எச்சரிக்கை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை மறு அறிவித்தல் வரை தவிர்க்குமாறு மீனவர்கள் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.